**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.34/2025**

**வழக்கு சாட்சி: PW.3**

**தேதி: 07.01.2026**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **கந்தவேல்** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**முதல் விசாரணை:**

நான் பி.மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். டீக்கடை படமாத்தூரில் வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரியை பார்த்திருக்கிறேன். எனக்கு எதிரி மீது உள்ள இந்த வழக்கு பற்றிய சம்பவம் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

போலீசார் என்னை விசாரித்த போது 04.11.2024ம் தேதி காலை 5.00 மணிக்கு நானும் என் மகன் ராகேஷ்ம் கடையில் இருந்த போது சிவகங்கை ரோட்டிலிருந்து கடை பக்கமாக TN 38 L 7175 என்ற எண்ணுள்ள TVS XL வாகனத்தில் நாட்டாகுடி கிராமத்தை சேர்ந்த ரத்தினம் மகன் பாலு என்பவர் ரத்தக்காயங்களுடன் உயிருக்கு பயந்து என் கடைக்கு வந்தார் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. அவருக்கு பின்னால் ஸ்கூட்டியில் அருவாளுடன் எதிரி வந்தார் என்றும் அவரை பார்த்து நான் சத்தம் போட்டேன் என்றால் சரியல்ல. எதிரி பாலுவை பார்த்து இன்னைக்கு நீ தப்பித்து விட்டாய், என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என அருவாளை காட்டி மிரட்டி விட்டு அங்கிருந்து சென்று விட்டார் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் பாலுவை விசாரித்த போது

நாட்டாகுடி கோவில் கும்பாபிஷேகம் சம்பந்தமாக கணேசன் மற்றும் ஊர்க்காரர்களுடன் எதிரி குண்டுமணி தகராறு செய்து விரோதமாக இருந்தார் என்றும், விநாயகர் சிலையை தூக்கி கிணற்றில் போட்டு விட்டார் என்றும், அதன் பிறகு ஊர்க்காரர்கள் சேர்ந்து கும்பாபிஷேகத்தை நல்லப்படியாக முடித்துவிட்டார்கள் என்றும், அதற்கு கணேசனும், பாலுவும் தான் காரணம் என்று மண்டல பூஜை எப்படி நடத்துவீர்கள் என்று பார்ப்போம் என்றும், நீங்கள் உயிருடன் இருந்தால் தானே நடத்துவீர்கள் என்று மிரட்டி வந்ததாக பாலு என்னிடம் சொன்னார் என்று நான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. 05.11.2024ம் தேதி மண்டல பூஜை நடக்க இருந்த நிலையில், 04.11.2024ம் தேதி பாலுவை எதிரி குண்டுமணி படமாத்தூர் சாலையில் நல்லாகுளம் பாலம் அருகே வண்டியில் சென்றுக்கொண்டிருந்த போது மறித்து நீ உயிருடன் இருந்தால் தான் மண்டல பூஜை நடக்கும் என்று மிரட்டி கையில் வைத்திருந்த அருவாளை எடுத்து பாலுவை கொலை செய்யும் நோக்கத்துடன் பாலுவை நோக்கி எறிந்ததில் பாலுவிற்கு இடது முழங்காலுக்கு கீழ் காயம் ஏற்பட்டதாகவும், பாலு பயந்து கொண்டு தப்பித்து என் கடைக்கு வந்ததாகவும் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரி குண்டுமணி எனக்கு வேண்டியவர் என்பதாலும், அவரை வழக்கிலிருந்து காப்பாத்தும் நோக்கத்திலும், ஏற்கனவே போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தை மாற்றி பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் எனக்கு இந்த வழக்கு சம்பவம் பற்றி தெரியாது என்று தான் சொன்னேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.